C033

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 06

**EPU6231- ஆரம்பப் பாடசாலை அமைப்பில் வழிகாட்டலும், உளவளத்துணையும்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

நேரம்: மு.ப. 09.30 - மு.ப 11.30

திகதி:- 17.03.2024

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி – I

1. "எந்தவொரு ஆசிரியருக்கும் வழிகாட்டுதலை வழங்கமுடியும், ஆனால் ஆலோசனை வழங்க முடியாது" மேற்கூறிய அறிக்கையுடன் உடன்படுகின்றீரா? உமது பதிலை நியாயப்படுத்துக.
2. பாடசாலை அமைப்பினுள் உள்ள வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையின் தொடர்ச்சியான செயன்முறையின் நன்மைகள் **மூன்றினை** (03) குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றை** (01) சுருக்கமாக விளக்குக.
3. பாடசாலையொன்றின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கும் ஆசிரியரின் வகிபங்கினைச் சுருக்கமாக ஆராய்க.
4. உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின் அடிப்படையில் மக்கள் எவ்வாறு உளவியல் பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள் என்பதைச் சுருக்கமாக விளக்குக.
5. பிள்ளைகளின் சமூக விருத்தியில் பொருத்தப்பாட்டு பிரச்சினையின் எதிர்மறையான தாக்கங்கள் **மூன்றினை** (03) விபரிக்குக.
6. பாடசாலை வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைகளில் பின்தொடர்தல் (Follow up) செயன்முறையின் **மூன்று** (03) அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக.
7. ஆலோசனையின் முக்கியமான நான்கு (04) ஒழுக்க நெறிக்கோவைகளை (Codes & Ethics) குறிப்பிடுக.
8. திறமை குறைந்தவர்களின் (Underachievers) **மூன்று** (03) பண்புகளைச் சுருக்காக விபரிக்குக.

**(05x08 =40புள்ளிகள்)**

பகுதி – II

9. **i.** ஆரம்பப்பாடசாலை மாணவர்களின் பொருத்தப்பாட்டு பிரச்சினைகளுக்கு பங்களிப்பு செய்யக்கூடிய நான்கு (04) பாடசாலை தொடர்பாகச் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை விளக்குக.

   **(10 புள்ளிகள்)**

   **ii.** ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் பொருத்தப்பாட்டு பிரச்சினைகளை குறைப்பதற்கு ஆசிரியரென்ற வகையில் நீங்கள் மேற்கொள்ளக் கூடிய நான்கு (04) நடவடிக்கைகளை விளக்குக.

   **(10 புள்ளிகள்)**

10. i. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் நடத்தைசார் கோளாறுகளுக்கு ஏற்புடைய நான்கு (04) காரணங்களை விளக்குக. **(10 புள்ளிகள்)**

ii. இக்காரணிகளில் ஒன்று அவர்களின் கல்வி சாதனையை எவ்வாறு பாதிக்கலாம் என்பதை நான்கு (04) விடயங்கள் மூலமாக விபரிக்குக. **(10 புள்ளிகள்)**

11. i. "பாடசாலை மக்கள் தொகையில் 10% மாணவர்கள் மனநலப் பிரச்சினைகளுடன் (Mental Health) போராடுகிறார்கள் என்பதை புள்ளிவிபரத்தரவு உறுதி செய்கிறது".

மேற்குறிப்பிட்ட அறிக்கையின் அடிப்படையில் அச்சூழலை பாதிக்கக்கூடிய மூன்று (03) காரணிகளை உதாரணங்கள் மூலம் விபரிக்குக. **(10 புள்ளிகள்)**

ii. "எந்தவொரு நபருக்கும், வாழ்க்கையின் எந்தச் சூழ்நிலையிலும் ஆலோசனை தேவைப்படலாம்". மேற்கூறிய அறிக்கையுடன் உடன்படுகின்றீரா? உமது பதிலை நியாயப்படுத்துக. **(10 புள்ளிகள்)**

12. i. இலங்கையின் ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகள் எதிர்கொள்ளும் ஐந்து (05) கல்விசார் பிரச்சினைகளைக் குறிப்பிடுக. **(05 புள்ளிகள்)**

ii. பிரச்சினைகளை தீர்ப்பதில் மாணவருக்கு உதவிசெய்ய பாடசாலை மற்றும் ஆசிரியர் எவ்வாறு வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கமுடியுமென்பதை மேற்குறிப்பிட்ட பிரச்சினை ஒன்றின் (01) மூலமாக விளக்குக. **(15 புள்ளிகள்)**

13. i. இன்றைய பாடசாலையில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவையின் தேவைக்கான காரணத்தை விளக்குக.
பின்வருவனவற்றிற்கு தலா மூன்று (03) விடயங்கள் மூலம் வழங்குக.
அ) குடும்பம்
ஆ) பாடசாலை
இ) சமூகம்
**(10 புள்ளிகள்)**

ii. ஆலோசகரின் (Counselor) தொழில்வாண்மைப் பொறுப்புக்களை ஐந்து (05) உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக. **(10 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -